## "Oru Kaipidi Arisi" (A Handful of Rice) – World Record Attempt

A monumental World Record attempt titled **"Oru Kaipidi Arisi"** (A Handful of Rice) was successfully organized on **March 18, 2026**, at the **Indra Ganesan Institutions** campus in Tiruchirappalli. This initiative, which centered on social responsibility and humanity, was conducted in collaboration with the **Indra Ganesan Lions Club**, **JCI Rock Town**, **Ideal Foundation**, and **Sriram Nursing Home**.

The event was presided over by **Er. G. Rajasekaran**, Secretary of Indra Ganesan Institutions. In his presidential address, he emphasized the necessity for students to act with social accountability, noting that such initiatives pave the way for societal progress. **Dr. G. Balakrishnan**, Director, offered felicitations and lauded the students for their remarkable enthusiasm and commitment. **Dr. M. Anusiya**, Registrar, provided a comprehensive overview of the event's coordination and its significant social impact.

Several eminent personalities graced the occasion and highlighted the importance of youth contribution to social service: **Dr. M. Selvaraj** (Sriram Nursing Home) **Jc. K. Mohanraj** (Founder, Ideal Foundation), **Jc. Dr. S. Muthukumar** (President, JCI Rock Town), **Jc. Dr. Arivalagan, Lion P. Saravanakumar**

The highlight of the day was the participation of approximately **3,000 students** from the Indra Ganesan educational family, each contributing a handful of rice. **Total Collection:** Over **250 kg** of rice was gathered. The collected rice is slated for donation to old age homes, orphanages, and underprivileged families. This selfless act was officially recorded in the **“Genius International Book of Records.”** Mr. **K. N. Sakthivel**, Senior Adjudicator (South Zone), formally announced the World Record achievement.

The event commenced with a welcome address by **Dr. Sridevi** (Indra Ganesan College of Arts and Science). It concluded with a vote of thanks by **Dr. K. Chithradevi**, Principal of the College of Allied Health Sciences. The tireless efforts of **Dr. K. Chithradevi** (Secretary, Indra Ganesan Lions Club) and **Dr.Sridevi** (Treasurer) in organizing this event were highly commended.

The **“Oru Kaipidi Arisi”** World Record attempt stands as an exemplary model of social concern. Beyond the record, it successfully strengthened the values of humanity and the spirit of sharing among the student community.




ஒரு
கைப்பிடி
அரிசி
ONEHANDFULRICECAMPAIGN









**Dailythanthi News**

# திருச்சி மாவட்ட செய்திகள்



### இந்திரா கணேசன் கல்வி நிறுவனத்தில்

## ஒரு கைப்பிடி அரிசி சேவை திட்ட உலக சாதனை நிகழ்ச்சி

திருச்சி, மார்ச்.19-

திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவன வளாகத்தில் ஒரு கைப்பிடி அரிசி சேவை திட்ட உலகசாதனை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்திரா கணேசன் லயன்ஸ் சங்கம், ஜெ.சி.ஐ. ராக்டவுன், ஐடியல் பவுண்டேஷன் மற்றும் ஸ்ரீராம் நர்சிங் ஹோம் இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சிக்கு இந்திரா கணேசன் கல்வி நிறுவனங்களின் செயலர் ராஜசேகரன் தலைமை தாங்கினார். இயக்குனர் பாலகிருஷ்ணன் வாழ்த்துரையாற்றினார். பதிவாளர் அனுசுயா தொகுப்புரை வழங்கினார். இதில் சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீராம் நர்சிங் ஹோம் செல்வராஜ், ஐடியல் பவுண்டேஷன் நிறுவனர் மோகன்ராஜ், ஜெ.சி.ஐ. ராக்டவுன் தலைவர் முத்துக்குமார் மற்றும் ஜெசி அறிவழகன் ஆகியோர் கலந்து கொண்டு, சிறப்புரை ஆற்றினர். இதில் சரவணகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இதில் இந்திரா கணேசன் கல்விக் குழுமத்தை சேர்ந்த சுமார் 300 மாணவர்கள் தலா ஒரு கைப்பிடி அரிசியை வழங்கினர். இதன் மூலம் மொத்தம் 250 கிலோவுக்கும் மேற்பட்ட அரிசி சேகரிக்கப்பட்டது. இந்த அரிசி முதியோர் இல்லங்கள், காப்பகங்கள் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சி ஜீனியஸ் இன்டர்நேஷனல் புக் ஆப் ரெகார்ட்ஸ் உலகசாதனை பதிவில் இடம் பெற்றது. தெற்கு மண்டல மூத்த மதிப்பாய்வாளர் சக்திவேல் உலக சாதனை அறிவிப்பை வெளியிட்டார். முன்னதாக இந்திரா கணேசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் ஸ்ரீதேவி வரவேற்றார். முடிவில் துணை மருத்துவ அறிவியல் கல்லூரி முதல்வர் சித்ராதேவி நன்றி கூறினார்.

**Malaimalar**

http://www.maalaimalar.com Regd. No. TRY/059/2024-2026 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 21-3-2026 (சனிக்கிழமை) 10 பக்கம் ₹ 5 ★★★ | மலர் 49 இதழ் 96

TRICHY 21-3-2026 (SATURDAY) 10 PAGES ₹ 5 | VOL: 49 ISSUE: 96




திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவனங்கள் சார்பில் நடைபெற்ற ஒரு கைப்பிடி அரிசி சேவை நிகழ்ச்சிக்காக உலக சாதனை முயற்சி சான்றிதழ் வழங்கப்பட்ட காட்சி.

### திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவனத்தில்

# ஏழை, எளியோர் காப்பகங்களுக்கு வழங்க ஒரு கைப்பிடி அரிசி நிகழ்ச்சி

## உலக சாதனை முயற்சியாக பதிவானது

*திருச்சி, மார்ச்.21—*

திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவன வளாகத்தில் "ஒரு கைப்பிடி அரிசி" உலக சாதனை முயற்சி நடைபெற்றது. சமூகப் பொறுப்புணர்வையும், மனிதநேயத்தையும் வலியுறுத்தும் இந்நிகழ்ச்சியை, இந்திரா கணேசன் லயன்ஸ் சங்கம், ஜெ.சி.ஐ. ராக் டவுன், ஐடியல் பவுண்டேஷன் மற்றும் ஸ்ரீராம் நர்சிங் ஹோம் ஆகியவை இணைந்து நடத்தியது.

நிகழ்ச்சிக்கு இந்திரா கணேசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் ராஜசேகரன் தலைமை தாங்கி பேசுகையில், மாணவர்கள் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, இத்தகைய முயற்சிகள் சமூக முன்னேற்றத்திற்கு வழி காட்டும் என்றார்.

தொடர்ந்து இயக்குநர் ஜி.பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கி, மாணவர்களின் ஆர்வமும் ஈடுபாடும் பாராட்டத்தக்கது என குறிப்பிட்டார். பதிவாளர் அனுசுயா தொகுப்புரை வழங்கி, நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பையும் அதன் சமூகப் பயனையும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட ஸ்ரீராம் நர்சிங் ஹோம் டாக்டர் செல்வராஜ், ஐடியல் பவுண்டேஷன் நிறுவனர் மோகன்ராஜ், ஜெ.சி.ஐ. ராக் டவுன் தலைவர் முத்துக்குமார், அறிவழகன் ஆகியோர் தங்களது உரைகளில் சமூகப்பணியின் அவசியத்தையும் இளைஞர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர். மேலும், லயன் சங்கம் சரவணகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இந்திரா கணேசன் கல்வி நிறுவனத்தை சேர்ந்த சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் தலா ஒரு கைப்பிடி அரிசி வழங்கினர். இதன் மூலம் மொத்தம் 250 கிலோவுக்கும் மேற்பட்ட அரிசி சேகரிக்கப்பட்டது. அந்த அரிசி முதியோர் இல்லங்கள், காப்பகங்கள் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இந்நிகழ்வு "ஜீனியஸ் இன்டர்நேஷனல் புக் ஆப் ரெக்கார்ட்ஸ்" உலக சாதனைப் பதிவில் இடம் பெற்றது. தெற்கு மண்டல மூத்த மதிப்பாய்வாளர் சக்திவேல் உலக சாதனை அறிவிப்பை வெளியிட்டார். நிகழ்ச்சியின் தொடக்கமாக இந்திரா கணேசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஸ்ரீதேவி வரவேற்புரை வழங்கினார். நிறைவாக துணை மருத்துவ அறிவியல் கல்லூரி முதல்வர் சித்ராதேவி நன்றி கூறினார்.

MARVEL AIR TRAVEL
(RECOGNISED BY GOVT.OF INDIA MINISTRY OF TOURISM)
Your Trusted Travel Expert

மேலும் கண்டறிக

Geographic Reference

City & Local Guides

Travel Guides & Travelogues



News 18 March, 2026 |

# “ஒரு கைப்பிடி அரிசி” - உலக சாதனை முயற்சி




18.03.2026 அன்று, திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள இந்திரா கணேசன் கல்வி நிறுவன வளாகத்தில் “ஒரு கைப்பிடி அரிசி” உலக சாதனை முயற்சி சிறப்பாக நடைபெற்றது.

10 ஆண்டு கணிப்புகள் ரூ. 198/-
தகுதிவாய்ந்த ஜோதிடர்களிடமிருந்து 100+ பக்கங்கள் விரிவான குண்டல
Sri Astro Vastu

மேலும் கண்டறிக
City & Local Guides
Maritime Transport
Geographic Reference

இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய இந்திரா கணேசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் Er. G. இராஜசேகரன் அவர்கள், தனது தலைமையுரையில் மாணவர்கள் சமூகப் பொறுப்புடன்




செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, இத்தகைய முயற்சிகள் சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் என்றார்.

மேலும் கண்டறிக
Maritime Transport
Geographic Reference
Travel Guides & Travelogues

தொடர்ந்து இயக்குநர் Dr. G. பாலகிருஷ்ணன் அவர்கள் வாழ்த்துரை வழங்கி, மாணவர்களின் ஆர்வமும் ஈடுபாடும் பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டார். பதிவாளர் Dr. M. அனுசுயா அவர்கள் தொகுப்புரை வழங்கி, நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பையும் அதன் சமூகப் பயனையும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட Dr. M. செல்வராஜ் (ஸ்ரீராம் நர்சிங் ஹோம்), Jc. K. மோகன்ராஜ் (நிறுவனர், ஐடியல் பவுண்டேஷன்), Jc. Dr. S. முத்துக்குமார் (தலைவர், JCI ராக் டவுன்), Jc Dr Arivalagan ஆகியோர் தங்களது உரைகளில் சமூகப்பணியின் அவசியத்தையும் இளைஞர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.




மேலும் கண்டறிக

City & Local Guides

Travel Guides & Travelogues

Maritime Transport

மேலும், லயன் ப. சரவணகுமார் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இந்திரா கணேசன் கல்விக் குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 3000 மாணவர்கள் தலா ஒரு கைப்பிடி அரிசி வழங்கினர்.

இதன் மூலம் மொத்தம் 250 கிலோவுக்கும் மேற்பட்ட அரிசி சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட அரிசி முதியோர் இல்லங்கள், காப்பகங்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட உள்ளது.

மேலும், இந்நிகழ்வு “ஜீனியஸ் இன்டர்நேஷனல் புக் ஆஃப் ரெகார்ட்ஸ்” உலக சாதனைப் பதிவில் இடம்பெற்றது.

தெற்கு மண்டல மூத்த மதிப்பாய்வாளர் K. N. சக்திவேல் அவர்கள் உலக சாதனை அறிவிப்பை வெளியிட்டார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக முனைவர் ஸ்ரீதேவி அவர்கள் (இந்திரா கணேசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி) வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியின் நிறைவாக துணை மருத்துவ அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் K. சித்ராதேவி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்த இந்திரா கணேசன்

# திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவன வளாகத்தில் “ஒரு கைப்பிடி அரிசி” உலக சாதனை முயற்சி




**திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவன வளாகத்தில் “ஒரு கைப்பிடி அரிசி” உலக சாதனை முயற்சி**

திருச்சி இந்திரா கணேசன் கல்வி நிறுவன வளாகத்தில் “ஒரு கைப்பிடி அரிசி” உலக சாதனை முயற்சி நடைபெற்றது. சமூகப் பொறுப்புணர்வையும் மனிதநேயத்தையும் வலியுறுத்தும் இந்நிகழ்ச்சி, இந்திரா கணேசன் லயன்ஸ் சங்கம், JCI ராக் டவுன், ஐடியல் பவுண்டேஷன் மற்றும் ஸ்ரீராம் நர்சிங் ஹோம் ஆகியவற்றின் இணைப்பில் நடைபெற்றது.




இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய இந்திரா கணேசன் கல்வி நிறுவனங்களின் செயலாளர் Er. G. இராஜசேகரன், தனது தலைமையுரையில் மாணவர்கள் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, இத்தகைய முயற்சிகள் சமூக முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் என்றார். தொடர்ந்து இயக்குநர் Dr. G. பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கி, மாணவர்களின் ஆர்வமும் ஈடுபாடும் பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டார். பதிவாளர் Dr. M. அனுசுயா தொகுப்புரை வழங்கி, நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பையும் அதன் சமூகப் பயனையும் விளக்கமாக எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட Dr. M. செல்வராஜ் (ஸ்ரீராம் நர்சிங் ஹோம்) Jc. K. மோகன்ராஜ் (நிறுவனர், ஐடியல் பவுண்டேஷன்) Jc. Dr. S. முத்துக்குமார் (தலைவர், JCI ராக் டவுன்), Jc Dr Arivalagan ஆகியோர் தங்களது உரைகளில் சமூகப்பணியின் அவசியத்தையும் இளைஞர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்.




மேலும், லயன் ப. சரவணகுமார் அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, இந்திரா கணேசன் கல்விக் குடும்பத்தைச் சேர்ந்த சுமார் 3000 மாணவர்கள் தலா ஒரு கைப்பிடி அரிசி வழங்கினர். இதன் மூலம் மொத்தம் 250 கிலோவுக்கும் மேற்பட்ட அரிசி சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட அரிசி முதியோர் இல்லங்கள், காப்பகங்கள் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், இந்நிகழ்வு “ஜீனியஸ் இன்டர்நேஷனல் புக் ஆஃப் ரெகார்ட்ஸ்” உலக சாதனைப் பதிவில் இடம்பெற்றது. தெற்கு மண்டல மூத்த மதிப்பாய்வாளர் K. N. சக்திவேல் உலக சாதனை அறிவிப்பை வெளியிட்டார். நிகழ்ச்சியின் தொடக்கமாக முனைவர் ஸ்ரீதேவி (இந்திரா கணேசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி) வரவேற்புரை வழங்கினார். நிகழ்ச்சியின் நிறைவாக துணை மருத்துவ அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் சித்ராதேவி நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்த இந்திரா கணேசன் லயன்ஸ் சங்க செயலாளர் Dr. K. சித்ராதேவி மற்றும் பொருளாளர் Dr. ஸ்ரீதேவி ஆகியோரின் tireless முயற்சிகள் பாராட்டத்தக்கவை. மொத்தத்தில், “ஒரு கைப்பிடி அரிசி” உலக சாதனை முயற்சி, சமூக அக்கறையை வளர்க்கும் சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது. இது மாணவர்களிடையே மனிதநேயத்தையும் பகிர்வு பண்பையும் மேலும் வலுப்படுத்தியது.